**திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு - 2021**

---

திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். பிரிவு 16(2) இன் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு நிறுவனத்திற்குமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், பிரதான கணக்கீட்டு அலுவலரால் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விதிகளினால் வழங்கப்படுகின்ற காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உபபிரிவு 38(1)(ஈ) இன் பிரகாரம் வருடாந்த மற்றும் நிதிக்கூற்றுக்களை சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதை உறுதி செய்வதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு நிறுவனம் தொடர்பாக வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு அலுவலர் வேண்டப்படுகின்றார்.

**2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணங்களின் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்குத் தேவையான நிதிக்கூற்றுக்கள் தவிர்ந்த அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

**2.1 நிதிக்கூற்றுக்கள்**

---

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 877(2)(இ) பிரமாணத்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் சான்றுப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய | நிதிக்கூற்றுக்கள் குறிப்பிட்ட திகதியில் தயாரிகப்பட்டு முடிக்கப்பட்ட போதிலும், நம்பிக்கைப் பொறுப்புச் சபை மற்றும் உள்ளகக் கணககாய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படாத நிலையில் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக கணக்காய்வு தலைமை அதிபதிக்குச் | நம்பிக்கைப் பொறுப்பிற்கான நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| போதிலும், நம்பிக்கைப் பொறுப்பின் 2021 ஆம் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபன சமர்பபிக்கப்பட முடியாதிருந்தது. |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1986 இன் 3 ஆம் இலக் திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்புச்சட்டம். | | | |
| (i) | 3(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடுகளுக்காக நம்பிக்கைப்பொறுப்புச் சபை நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் வருடத்திற்காக இவ்வறிக்கைத் திகதி வரையில் நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்படுவதற்குத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | 5 (1) பிரிவு | திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கும் உதவும் விதத்தில் திட்டமிடப்பட்ட நலன்புரி நிதியம், சேமிப்பு நிதியம், சேமிப்பு அல்லது சிக்கனச் சங்கம் மற்றும் ஏனைய சமமான முன்மொழிவுகள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | பொதுத் திறைசேரியினால் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மட்டும் வழங்கப்படுவதற்கு முன்னுரிமை அளித்து பணம் கொடுக்கப்பட்டிருந்த காரணத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை செயற்படுத்த முடியாத நிலைமையொன்று ஏற்பட்டது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 5 (2) (அ) பிரிவு | தகுதி வாய்ந்த திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கும் 60 வயது கடந்த பின்னர் கடன்கள், கொடுப்பனவுகள், வீட்டு வசதிகள் அல்லது பிற ஒத்த சலுகைகளை வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி. | - மேற்படி - |
| (iv) | 5(2) (ஆ) பிரிவு | உடல் ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ ஊனமுற்றவர்கள் மற்றும் தங்கள் தொழிலைத் தொடர முடியாத தகுதி வாய்ந்த திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கும் உதவக்கூடிய எவ்விதமான நிதி உதவிகளையும் வழங்குவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | 6(2) (அ) பிரிவு | நிதியத்தைப் பயன்படுத்துவதற்காகப் பொருத்தமான செயற்திட்டங்கள் அல்லது செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல நடைமுறைச் சிக்கல்களை எதிர் கொண்டு விரும்பிய நோக்கங்களை அடைய முடியாமையால் நிதியை உருவாக்குவதற்கான செயற்திட்டங்கள் அல்லது நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 877(1)(இ) | கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பினால் மீளாய்வாண்டிற்காக வரவு செலவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல வருடங்களின் பின்னர் புதிய நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்பட்டு 2021 யூலை 06 ஆந் திகதியொன்று செயற்படுத்தப்பட்டமையினால் மிகக் குறுகிய காலப் பகுதிக்குள் வரவு செலவுத் திட்டமொன்று அங்கீகரிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பினால் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு 2021 ஆம் வருடம் வரையில் 166 ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 இல் ஓய்வூதியத்திற்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ள 92 கலைஞர்களுக்கு கூட்டுத்தாபன பொறுப்பின் வருமானத்தை உயர்த்தி ஓய்ஹிதியத்தை வழங்குவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தவில்லை. | காத்திருப்போர் பட்டியலில் உள்ள தகுதியுள்ள திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு வருடாந்த கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் நிலையைக் கருத்திற் கொள்ளப்பட்ட பின்னர் புதிய ஓய்பவூதிய மானியங்கள் வழங்கப்படுவதற்கு கடந்த வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கடந்த வருடங்களைப் போன்று காத்திருப்போர் பட்டியலில் உள்ள கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |